LIBRARY
21
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## PART - III EXAMINATION IN BACHELOR OF COMMERCE/ BUSINESS ADMINISTRATION

## 2002/ 2003 (REPEAT)

## BBA/ COM 401 (A) AUDITING

ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 02மணித்தியாலங்கள்

---

01. கணக்காய்வாளர் உயர்தொழில் ஒழுக்கவியல் நடத்தைச் சட்டத்திற்கு இணங்க நடத்தல் வேண்டுமென இலங்கை கணக்காய்வு நியமங்கள் 01ல் (SLAuS – 01) குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. கணக்காய்வாளரின் உயர் தொழில் பொறுப்புக்களை தழுவிநிற்கும் ஒழுக்கவியல் கோட்பாடுகள் அல்லது பொதுவான கோட்பாடுகள் எவை?

(05 புள்ளிகள்)

ஆ. நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வின் நோக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

இ. கணக்காய்வின் விசாலம் அல்லது செயற்பரப்பு எல்லை (Scope of Audit) என்பதன் கருத்து யாது?

(05 புள்ளிகள்)

ஈ. கணக்காய்வு செய்யப்படுபவரை பொறுத்தவரையில் கணக்காய்வாளர் சுதந்திரமானவராக இருத்தல் வேண்டும். கணக்காய்வு செய்யப்படுபவருக்கு கணக்காய்வாளர் சுதந்திரமற்றவராக கருதப்படக்கூடிய ஐந்து (05) நிலைமைகளைத் தருக.

(05 புள்ளிகள்)

உ. கணிசத்தன்மையான தவறான கூற்றினை (Material misstatement) கணக்காய்வாளர் கண்டு பிடிக்கும் திறனைப் பாதிக்கக்கூடியதாக கணக்காய்வில் உள்ள இயற்கையான வரையறைகள் எவை?

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02. அ. 1995ம் ஆண்டின் 15ம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் சட்டத்தினை உருவாக்கியதன் நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. கணக்காய்வு நியமங்களை யார் பின்பற்றல் வேண்டும்?

(05 புள்ளிகள்)

இ. இலங்கை கணக்காய்வு நியமங்கள் ஐந்து (05) தொகுதிகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. அவற்றினைப் பெயரிடுக.

(05 புள்ளிகள்)

ஈ. கணக்காய்வு நியமங்களிற்கும், நடைமுறைகளிற்கும் (Auditing standards and Audit Procedures) இடையிலான வேறுபாடுகள் யாது?

(05 புள்ளிகள்)

உ. பொதுத்துறையில் (Public sector) கணக்காய்வு நியமங்களின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் தருக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

அ. பின்வரும் கணக்காய்வு அபிப்பிராயங்களை கணக்காய்வாளர் எத்தகைய சூழ்நிலைகளில் வெளிப்படுத்த முடியும் எனத் தருக.

1. முனைப்பழியான அபிப்பிராயம் (Qualified opinion)
2. முனைப்பழியற்ற அபிப்பிராயம் (Unqualified opinion)

(10 புள்ளிகள்)

ஆ. கணக்காய்வு அறிக்கையின் மூலங்களை (Elements of Audit report) நிரல்படுத்துக.

(05 புள்ளிகள்)

இ. கணக்காய்வு விசாலத்திற்கான வரையறைகள் எந்த விதங்களில் இடம் பெறலாம் என விளக்குக.

(05 புள்ளிகள்)

ஈ. "முகாமையுடன் உடன்பாடாமை" என்பதன் கருத்து என்ன?

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

அ. கணக்காய்வு பணிக்கு ஈடுபடுத்தல் கடிதத்தின் (Audit Engagement letter) பிரதான உள்ளடக்கங்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

ஆ. புதிய ஒரு கணக்காய்வு பணிக்கு ஈடுபடுத்தல் கடிதத்தினை அனுப்புதல் பொருத்தமானது எனத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

(03 புள்ளிகள்)

இ. கணக்காய்வு வேலைத்தாள்களில் கணக்காய்வு நிகழ்ச்சி நிரலினை உள்ளடக்குவதன் நன்மை, தீமைகள் எவை?

(04 புள்ளிகள்)

ஈ. மிகப்பெரிய கம்பனி ஒன்றின் கொள்வனவுகளிற்கும், விற்பனைகளிற்குமான கணக்காய்வு நிகழ்ச்சி திட்டத்தினை (Audit Program) வடிவமைக்குக.

(10 புள்ளிகள்)

உ. கணக்காய்வு வேலைத்தாள்களைப் பராமரிப்பதன் நான்கு நோக்கங்களை நிரல்படுத்துக.

LIBRARY
2 I Ju
Eastern University, Sri Lanka

(01 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05. அ. கணக்காய்வாளரால் பயன்படுத்தும் ஐந்து வகையான சான்றுகளை நிரல்படுத்துக.

(05 புள்ளிகள்)

ஆ. சான்றுகளின் போதுமான தன்மையை நிர்ணயிப்பதில் பங்கு வகிக்கும் காரணிகள் எவை?

(04 புள்ளிகள்)

இ. கணக்குகளில் காட்டப்பட்டிருக்கும் பின்வரும் விடயங்களை எவ்வாறு சான்று உறுதியிடுவீர் என விளக்குக.

1. கணணிகளின் கொள்வனவு
2. தொலைபேசியும் மின்கட்டணமும்

(04 புள்ளிகள்)

ஈ. மோசடி மற்றும் வழு (Fraud and Error) என்னும் சொற்றொடர்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

உ. பின்வரும் சொற்றொடர்களிற்கு இடையேயான அடிப்படை வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

1. கட்டுப்பாட்டு சோதனைகளும் உறுதிப்படுத்தல் நடைமுறைகளும்.
2. உள்ளக கணக்காய்வும் வெளியக/ புறக் கணக்காய்வும்.
3. நியதிச் சட்டக் கணக்காய்வும், தனிப்பட்ட கணக்காய்வும்.
4. அகக் கட்டுப்பாட்டு கடிதமும் கணக்காய்வு பணிக்கு அமர்த்தல் கடிதமும்.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. 1. அ. உள்ளக கணக்காய்வாளரின் நான்கு கடமைகளை நிரல்படுத்துக.

ஆ. இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

2. ஒரு கம்பனியின் வியாபார கையிருப்புக்களை எவ்வாறு மெய்மையாய்வு செய்வார் எனக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

3. பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கும் பின்வரும் விடயங்களை எவ்வாறு மெய்யாய்வு செய்வீர்?

அ. வங்கி மேலதி பற்று - ரூபா. 05 மில்லியன்

ஆ. வருமதியாளர் - ரூபா. 1.5 மில்லியன்

(08 புள்ளிகள்)

4. உற்பத்தி கம்பனி ஒன்றின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கும் பின்வரும் விடயங்கள் சம்பந்தமான கணக்காய்வு நடைமுறைகள் மூன்றினை (03) நிரல்படுத்துக.

அ. உற்பத்திக் கூலிகள்

ஆ. அறவிடமுடியாக் கடனும், ஐயக் கடனும்.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

(அ) இயந்திரக் கருவிகள்

ART ஒரு இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்படவுள்ளது. இப்பொருள் நடைமுறை ஆண்டு முழுவதும் கிழமைக்கு 100 அலகுகள் ஸ்திரமான கேள்வியாக கொண்டுள்ளது. ஒவ்வொரு முறையும் உற்பத்தி ஆரம்பிக்கப்படுகின்றபோது ஒழுங்குபடுத்தும் செலவாக 1000 ஏற்படுகின்றது. அத்துடன் அலகிற்கான மாறும் செலவு ரூபா 40 ஆகும். உற்பத்தி நடைபெறுகின்ற போது கிழமைக்கு 500 அலகுகள் உற்பத்தியாக்கப்படுகிறது. பராமரிப்பு செலவு ஆண்டிற்கு அலகு ஒன்றிற்கு ரூபா 10 ஆகும். இக்கம்பனி ART பொருளை அலகு ரூபா 50 ஆக வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கின்றது. இதற்கான கட்டளைச்செலவு கட்டளை ஒன்றிற்கு ரூபா 100 ஆகும். பராமரிப்பு செலவு ஆண்டிற்கு அலகு ஒன்றிற்கு ரூபா10 ஆக மாறாது காணப்படுகின்றது.

(ஆ) வாகனக் கருவிகளின் தரம்:

பலதரப்பட்ட வாகனக் கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவை சரியான விபரங்களுக்கமைய உருவாக்கப்படல் வேண்டும். இவற்றில் ஒன்று RTI இது 80 மில்லிமீற்றர் பெயரளவில் (சிறிய அளவில்) வேண்டப்படுகின்றது. செய்முறை கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படுகின்றபோது பெருமளவு எண்ணிக்கையினை RTI, 80 மில்லி மீற்றர் இடை அளவிலும் 0.6 மில்லி மீற்றர் நியம விலகல்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இச்செய்முறையினை ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் 36 கருவிகளின் எழுமாற்றான மாதிரி எடுப்பின் மூலம் கண்காணிக்கப்படுகின்றது.

(இ) உலோகப் பெட்டி இயந்திரம்

GTZ லிமிட்டட் எதிர்காலத்தில் உலோகப்பெட்டிகளை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக நிலையான வருடாந்த வருமானத்தைத் தரக்கூடிய ஒரு இயந்திரத்தினைப் பயன்படுத்துகின்றது. செயற்பாட்டுச் செலவும் அறுதிப் பெறுமதியும் (000' ரூபாய்களில்) கீழே தரப்பட்டுள்ளது.

| இயந்திரத்தின் வயது | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டுச் செலவு | 1000 | 1500 | 2000 | 2500 | 3500 | 5000 |
| அறுதிப் பெறுமதி | 3000 | 1800 | 1000 | 500 | 300 | 0 |

இக்கம்பனி குறித்த இயந்திரம் 6 ஆண்டுகளின் பின் பாவனைக்கு உகந்ததாகக் காணப்படாதபோது அதனைப் பிரதியீடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. பிரதியீட்டு இயந்திரத்தின் கிரயம் ரூபா 5,000,000 ஆகும்.

Eastern University, Sri Lanka

(ஈ) தபாற் கட்டணச் செயற்பாடு

பொதுமக்களுக்கு விற்பனையினை நேரடியாக மேற்கொள்வதற்காக இக்கம்பனி அண்மைக் காலமாக ஓர் தபாற் கட்டளை செயற்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது. “தாமாகவே மேற்கொள்ளும்” பொருட்கள், இப்பொருள் பல பயன்பாட்டுடன் பல்வேறு பொருட்களைக் கொண்டு சரிப்படுத்தக் கூடியதாகும். ஓர் அனுபவமாக மூன்று வேறுபட்ட விலைகள் பரீட்சிக்கப்படுகின்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிழமைக்காக கீழே அதன் பெறுபேறுகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

| அலகுக்கான விலை (ருபா) | 7 | 9 | 12 |
|---|---|---|---|
| அலகு விற்பனை (கிழமைக்கு) | 1050 | 950 | 800 |

துபாற் கட்டளைச் செயற்பாட்டின் கிழமைக்கான நிலையான செலவு ருபா 2000. மாறும் உற்பத்திச் செலவு அலகொன்றிற்கு ருபா 4 அத்துடன் காப்புறுதிச் செலவாக விற்பனை செய்யப்படும் எண்ணிக்கையின் வர்க்கத்திற்கு 2 வீதம் ஆகும்.

(உ) கடுமையான மேற்பார்வை உபகரணம்.

கைத்தொழில் பாதுகாப்பு உபகரணத்துக்கான சந்தை (பிரதானமாக வெளிநாட்டில்) அதிகரித்துச் செல்கின்றது. GTZ லிமிட்டட் பலதரப்பட்ட கேட்கும் கருவிகளை உற்பத்தி செய்கின்றது. இவை தனித்து செயற்படக் கூடிய நாளாந்த பொருளாகக் காணப்படுகின்றது. கடந்த 12 மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட TRI பொருட்களிற்கான உற்பத்திச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாதம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 60 | 100 | 140 | 10 | 40 | 200 | 220 | 120 | 20 | 160 | 80 | 240 |
| செலவு | 22 | 29 | 33 | 8 | 18 | 37 | 38 | 31 | 12 | 35 | 26 | 39 |

மேற்கூறப்பட்ட விடய ஆய்வு தகவல்களின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1 (a) மூலதனச் செலவு 10% எனக்கொண்டு எந்த வயதில் உலோகப்பெட்டி இயந்திரம் பிரதியீடு செய்யப்பட வேண்டும் எனக் கணிப்பிட்டு அதற்கான காரணத்தை விளக்குக.

(18 புள்ளிகள்)

(b) இலாபச் சமன்பாட்டு (break even) புள்ளியை அடைவதற்கு எவ்வளவு நிலையான ஆண்டு வருமானத்தினை இவ்வியந்திரம் உழைக்க வேண்டும்.

(10 புள்ளிகள்)
(மொத்தம் 28 புள்ளிகள்)

2)

a) "செயற்திட்டம்", செயற்திட்டமுகாமை என்ற பதங்களுக்கு வரைவிலக்கணம் கூறி வேறுபடுத்துக.

(04 புள்ளிகள்)

b) ஓர் செய்திட்டத்தின் குணாதிசயங்களை அடையாளங்கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

c) வேறுபட்ட செயற்திட்ட வகைகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

3)

a) செயற்திட்ட தயாரித்தல் செயற்பாட்டிற்கான வரைவிலக்கணங்கூறி, செயற்திட்டத் தயாரித்தலுக்கான அவசியத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)

b) ஓர் செய்திட்டத்திற்கான மாதிரி சாத்தியளவான அறிக்கையினை தயாரிக்கும் போது கருத்தில் எடுக்கப்பட வேண்டிய காரணிகளை அடையாளம் கண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

4)

a) ஓர் செயற்திட்டத்தினை தயாரிக்கும் போது செயற்திறன்மிக்க முன் மதிப்பீட்டுத் திட்டத்தின் பங்களிப்பினை விளக்கி, செயற்திட்ட முன்மதிப்பீடு மேற்கொள்கின்ற போது கருத்தில் எடுக்கப்பட வேண்டிய காரணிகளை பட்டியலிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

d) செய்திட்ட பின் மதிப்பீட்டின் பிரதான குறிக்கோளின்ன விளக்கி அது எதற்கு விடைகாணமுனைகின்றது எனக் கூறுக.

(06 புள்ளிகள்)

5)

a) "செயற்திட்டம் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான ஓர்முழுமையான பொருளாதார முயற்சி". இக்கூற்றின் அடிப்படையில் எவ்வாறு செயற்திட்டங்களினால் பொருளாதார அபிவிருத்தி அடையப்படமுடியும் என விளக்குக.

(08 புள்ளிகள்)

b) ஓர் தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டத்திற்கான செயற்திட்ட நிகழ்ச்சித்திட்ட படிமுறையினை ஏற்படுத்தி செயற்திட்ட திட்டமிடலில், அதன் பயன்பாட்டினை விளக்குக.

Eastern University, Sri Lanka JUL

(10 புள்ளிகள்)

6)

ஓர் பொறியியலாளர் ஒன்றியம் ஓர் ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தினை தயாரித்து வினியோகிக்கின்றது. இன் நிகழ்ச்சித்திட்டம் கூட்டங்களுக்கான திகதிகளையும், பேச்சுக்களுக்கான பட்டியலினையும் அதன் சுருக்கங்களுடன் வழங்குகின்றது. அத்துடன் பணம் செலுத்திய அங்கத்தவர்களின் நிகழ்கால பட்டியலினையும் வழங்குகின்றது. இந் நிகழ்ச்சித்திட்டத்தினை செய்து முடிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்படுகின்றது.

| | நடவடிக்கை | முன் நடவடிக்கை | சாதாரண காலம் (நாளில்) |
|---|---|---|---|
| A | நிகழ்ச்சித்திட்டத்திற்கான திகதிகளை தெரிவு செய்தல் | - | 04 |
| B | பேச்சாளர்களின் இணக்கத்தினை பெறுதலும் அவர்களின் பேச்சுக்கான சுருக்கத்தினை தயாரித்தலும் | A | 12 |
| C | நிகழ்ச்சித்திட்டத்திற்கான விளம்பரப் பொருட்களை பெற்றுக் கொள்ளுதல் | A | 11 |
| D | அங்கத்துவ புதுப்பித்தல் அறிவித்தலினை தபாலிடல் | - | 20 |
| E | பணம் செலுத்திய அங்கத்தவர்களின் பட்டியலினை தயாரித்தல் | D | 06 |
| F | அங்கத்தவர் பட்டியலினை அச்சுப்பதிப்பதற்கு அனுப்புதல் | B, C, E | 07 |
| G | நிகழ்ச்சித்திட்டத்தினை ஒன்றிணைத்தலும் அச்சிடுதலும் | F | 10 |
| H | கனணி அச்சிடப்பட்ட அங்கத்தவர் விலாசங்களை பெற்றுக்கொள்ளுதல் | E | 05 |
| I | நிகழ்ச்சித்திட்டத்தினை அனுப்புதல் | G, H | 04 |

a) சாதுரிய மார்க்கத்தினையும் செயற்திட்ட காலத்தினையும் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

b) ஒவ்வொரு நடவடிக்கைக்குமான மொத்த மிதப்பினை கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

c) ஒவ்வொரு நடவடிக்கையும் ஒன்றியத்தின் அலுவலக ஊழியர் ஒருவரை வேண்டி நின்றால், நடவடிக்கைகள் மதிப்பிடப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்படலாம் எனின். இத்திட்டத்திற்கு தேவையான ஆகக்குறைந்த எண்ணிக்கையான ஊழியர்கள் எத்தனை பேர்.

(04 புள்ளிகள்)

d) ஊழியர்களுக்கான உச்ச கிடைப்பனவு 2 ஊழியர்களாக இருந்தால் இச் செயற்திட்டத்தில் எத்தகைய தாக்கம் ஏற்படும்.

(06 புள்ளிகள்)

7)

யுனிலிவர் லிமிட்டட் நான்கு பொறிகளை கொண்டுள்ளது. இது பின்வரும் 5 பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியது. உற்பத்திச் செலவும் விற்பனை வருமானமும் ஒவ்வொன்றிற்குமிடையில் வேறுபட்டு காணப்படுகின்றது.

அலகிற்கான விற்பனை வருமானம் (000' ரூபாய்களில்)

| | பொருட்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| பொறி | 1 | 2 | 3 | 4 | 5 |
| A | 75 | 93 | 74 | 87 | 92 |
| B | 85 | 95 | 76 | 99 | 86 |
| C | 80 | 92 | 78 | 95 | 97 |
| D | 83 | 90 | 79 | 94 | 96 |

அலகிற்கான உற்பத்திச் செலவு (000' ரூபாய்களில்)

| | பொருட்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| பொறி | 1 | 2 | 3 | 4 | 5 |
| A | 74 | 85 | 70 | 86 | 85 |
| B | 80 | 88 | 70 | 94 | 79 |
| C | 77 | 87 | 74 | 93 | 94 |
| D | 65 | 89 | 73 | 91 | 92 |

மேற்கூறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் எந்த பொருளை எந்த பொறியினால் உற்பத்தி செய்வதன் மூலம் இலாபத்தினை உச்சப்படுத்தலாம் என்பதை வரையறுக்கப்பட்ட யுனிலிவர் நிறுவனத்திற்கு சிபார்சு செய்க.

(18 புள்ளிகள்)

8)

பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

a) செயற்திட்ட வாழ்க்கை வட்டம்

b) செயற்திட்ட அடையாளம் காணல்

c) காரண முடிவுப் பகுப்பாய்வு

d) செயற்திட்ட முன் மதிப்பீடு

e) வள ஒதுக்கீடு

f) சாத்தியவள கற்கைகள்

(3X6 = 18 புள்ளிகள்)

LIBRARY
Eastern University, Sri Lanka